## ஹங்குரங்கெத பிரதேச சபை
## நுவரஎலிய மாவட்டம்

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹங்குரங்கெத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) பனாங்கமுவ வீதி நிர்மாண செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்திற்காக செலுத்திய ரூபா 399,738 ஆன முற்பணத் தொகையை தீர்வு செய்யாமல் இருந்தமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணம் ரூபா 399,738 கூடுதலாகவும் ஆண்டின் செலவினம் ரூபா 399,738 ஆல் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் மே முதல் செப்தெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் தொடர்பாக ஆராய்ந்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் சரியாக இனங்காணாமல் ஆண்டில் காசாக கிடைத்த ரூபா 1,459,950 ஆன முத்திரை கட்டணங்களுக்கு ரூபா 3,442,550 ஆன மதிப்பிடப்பட்ட வருமானமொன்று சேர்க்கப்பட்டு ஆண்டின் முத்திரைக் கட்டண வருமானமாக ரூபா 4,902,500 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய 02 கணக்கு மீதிகளுக்குரிய பெறுமதி உரிய கணக்கு மற்றும் பயன்பாட்டு ஆவணங்களுடன் ஒப்பிடும் போது ரூபா 490,436 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நானாவித வைப்புக்கள் மீதி, வைப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் ஒப்பிடும் போது ரூபா 1,783,461 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாணவேலை கடன்பட்டோர் மீதி ரூபா 34,338,905 தொகையாகக் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 21,275,427 தொகை ஒரு வருட காலத்தை மிகைத்து அறவிடப்படாமல் காணப்பட்டது.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 24,464,702 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 11,653,009 தொகை 01 வருட காலத்தை மிகைத்துஇருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்த ரூபா 121,344,173 பெறுமதியான 08 கணக்கு விடயங்களுக்காக எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

வழங்கப்பட்டு கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 19,095 பெறுமதியான 07 காசோலைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் நிதிப் பிரமாணத்தின் 396(ஈ) மற்றும் மதிய மாகாண நிதி 283.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,015,791 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,962,267 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2016 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2016 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 4,896,800 | 2,703,632 | 1,706,199 | 2,368,977 | 1,808,500 | 1,812,744 | 644,335 | 2,218,065 |
| வாடகைகள் | 6,123,900 | 4,778,602 | 5,757,863 | 2,365,402 | 4,071,400 | 5,026,759 | 3,625,216 | 1,780,575 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,633,100 | 2,546,313 | 2,546,313 | - | 19,860,500 | 2,660,504 | 2,660,504 | - |
| ஏனைய வருமானம் | 7,063,500 | 7,557,952 | 3,370,351 | 6,088,369 | 7,303,800 | 9,973,676 | 2,735,217 | 8,669,510 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 4,333,407 ஆன நிலுவை வீதவரி, கடை வாடகை, மற்றும் நீர்க்கட்டணங்கள் நிலுவையில் ஆண்டின் இறுதி வரை ரூபா 1,322,388 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் நிலுவை வருமான அறவீடு திருப்திகரமான நிலமையில் காணப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் வீதவரி, கடை வாடகை, மற்றும் நீர்க்கட்டணங்கள் பட்டியலிடல் ரூபா 5,297,536 ஆக இருந்ததுடன், அப்பட்டியலிடலில் இருந்து ஆண்டின் இறுதி வரை ரூபா 3,504,313 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொதுப் வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபை அதிகாரப் பிரதேசத்தின் மக்களுக்கு இடையே கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக பகிர்ந்தளிக்கும் பொருட்டு 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது பல்வேறு கூறுவிலைகளில் ரூபா 1,081,454 பெறுமதியான 310 கழிவுப்பொருள் தொட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 224 தொட்டிகள் மீளாய்வாண்டின் இறுதிவரையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 02 ஆண்டுகளின் போது வெவ்வேறு விலைகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த எஞ்சிய தொட்டிகளின் பெறுமதியையும் கணக்கிட முடியாமல் இருந்தன.

**(ஆ) சுற்றாடல் பிரச்சினைகள்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுப்பொருள் பயன்படுத்தப்பட்டு சேதனப் பசளை உற்பத்தி செய்யாமல் அக்கழிவுப்பொருட்கள் மண் இடப்பட்டு மூடப்பட்டு வந்திருந்ததுடன் கழிவுப்பொருள் நிலையத்திற்கு கொண்டுவரப்படும் அழுக்கடைந்த பொலித்தீன் தீயிட்டு அழிக்கப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக பிரதேச சபை போதியளவில் அறிந்துகொள்ளாததன் காரணமாக அது தொடர்பில் போதியளவு செயற்பாடுகள் ஏதும் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க 2008 சனவரி 25 ஆந் திகதிய 1523/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம். சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டிருந்த 14 அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1998 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் அமைச்சினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த கெப் வண்டிற்காக 1998 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 பராமரிப்பும் திருத்த வேலைகள் செய்யப்படாமை

(அ) மத்துரட்ட உப அலுவலகத்திற்குரிய பொது நூலகத்திற்காக தேவையான வசதிகள் போதியளவில் வழங்கப்படாதிருந்ததுடன் பராமரிப்பு நடவடிக்கைகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரிகில்லகஸ்கட பொது வியாபார கட்டிடத்திற்காக தேவையான மின்சாரம் மற்றும் நீர் வசதிகள் வழங்கப்படாமல் இருந்ததுடன் கட்டிடங்கள் முறைப்படி பராமரிக்கப்பட்டோ திருத்தம் செய்யப்பட்டோ காணப்படவில்லை.

(இ) ரிகில்லகஸ்கட உப அலுவலகத்திற்காக தேவையான வசதிகள் வழங்கப்படாமல் இருந்ததுடன், உப அலுவலகத்தின் கூரையும் திருத்த வேண்டிய நிலைமையில் காணப்பட்டது.

### 3.3.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

மாகாண சபை உறுப்பினர் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 642,312 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த உடவத்தகும்புற புதிய கிராமத்தின் குடிநீர் தாங்கிக்காக நீர் எடுத்து வரும் மற்றும் விநியோக வழிகள் முறையாக நிர்மாணிக்கப்படாமல் இருந்ததுடன் நீர் தாங்கி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதீட்டின் படி மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்கள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் இணக்கஞ் செய்யும் போது 06 வருமான விடயங்களில் 10 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையும் 04 செலவின விடயங்களில் 42 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையும் முரண்கள்

அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றன.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| வருமானம் | நிலுவை வருமானங்கள் அறவிடப்படாமை. |
| கடன்பட்டோர்/கடன் கொடுத்தோர் | பழைய மீதிகளை தீர்வு செய்யாமை. |
| சொத்துக்கள் | (I) உயர் மட்டத்தில் பயன்படுத்தாமை<br>(II) பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் செய்யப்படாமை |